விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 13 இதழ் 70
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26 — 04 — 1993

## ★ லலித் கொலையில் தொடர்பில்லை; புலிகள் அறிவிப்பு

(கொழும்பு) லலித் அத்துலத் முதலியின் படுகொலைக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென விடுதலைப்புலிகள் மறுப்புத் (4-ம் பக்கம் பார்க்க)

## லலித் கொலைக்கு ஜனாதிபதி மறுப்பு

(கொழும்பு) அரசியல் தலைவர்கள் படுகொலைசெய்யப்படும் போது எல்லாம் ஐக்கிய தேசியக்கட்சி மீதே குற்றம் சுமத்தப்படு (4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு தொடர்பில்லை காமினி கூறுகிறார்

(கொழும்பு) லலித் கொலையில் மானிப்பாயைச் சேர்ந்த அப்பையா பாலகிருஷ்ணன் என்பவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் (4-ம் பக்கம் பார்க்க)

### ★ லலித் கொலையின் எதிரொலி

# அரசாங்க எதிர்ப்புக் கலவரம் கொழும்பில் ஏற்படும் அபாயம்

### மக்கள் கூட்டம் தலைநகர் விரைவு

(கொழும்பு)

'லலித்' கொலையை அடுத்து கொழும்பில் அரசு எதிர்ப்பு கலவரம் ஏற்படும் சாத்தியம் பெருமளவில் அதிகரித்து வருவதாகவும் முப்படைகளும் உஷார்படுத்தப்பட்டு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் முழுத்தயார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் நேற்றிரவு பல ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (4-ம் பக்கம் பார்க்க)

## ★ யாழ். ஆஸ்பத்திரியில் 25 வைத்தியர்கள் இன்று முதல் கடமை

(யாழ்ப்பாணம்) யாழ். போதனா வைத்திய சாலையில் இன்றிலிருந்து கடமையாற்றுவதற்கு 25 வைத்தியர்கள் தெரிவு செய் (4-ம் பக்கம் பார்க்க)

## அரசு தரப்பினர் வீடுகளுக்கு தலைநகரில் பலத்த கல்வீச்சு

(கொழும்பு) லலித் கொலையை அடுத்து நேற்றுமுன்தினம் அரசு தரப்பு அரசியல்வாதிகளின் பலரின் வீடுகள்மீது பலத்த கல்வீச்சுகள் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

லலித் கொலையுண்டதால் ஆத்திரமடைந்துள்ள அவரது ஆதரவாளர்களே அரசு தரப்பினரது வீடுகள் மீது இத்தாக்குதலை நடாத்தியுள்ளனராம்.

தற்போதும் இவ்வாறான பல தாக்குதல்கள் தெற்கில் பல பகுதிகளிலும் நடைபெற்று வருவதாகவும் அரசு தரப்பு அரசியல்வாதிகளின் வீடுகளுக்கும் பலத்த காவல்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சு-வி)

## கொலையாளி பற்றிய அரசின் கூற்றை மக்கள் நம்பவில்லை

(கொழும்பு) லலித்தை அப்பையா பாலகிருஷ்ணன் என்ற தமிழ் இளைஞரே கொலை செய்ததாக அரசு வலிந்து கூறிவருவதை மக்கள் நம்பவில்லை எனவும் இது அரசின் கபட நாடகமே என மக்கள் கருதுவதாக 'லக்திவ' ஆசிரியர் கூறியுள்ளார்.

இவர் சபனேட் அருந்திகே (1-ம் பக்கத் தொடர்ச்சி)

## ரூபவாஹினி அதிகாரி தாக்கப்பட்டார்

(கொழும்பு) லலித்தின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்ற 'ரூபவாஹினி' அதிகாரி ஒருவர் நேற்று பலமாக (4-ம் பக்கம் பார்க்க)

## மட்டு நகரில் 2நிமிட அதிரடி ஐந்து இராணுவம் உயிரிழப்பு

(மட்டக்களப்பு) மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் நேற்று நடாத்திய மின்வேக அதிரடித் தாக்குதலில் ஐந்து படையினர் கொல்லப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை 7-45 மணியளவில் இந்தஅதிரடித் தாக்குதல் இரு நிமிடங்கள் மட்டும் நீடித்தது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிள்ளையாரடி காவற் படை நிலையத்தில் இருந்து வெலிக்கந்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஐந்து படையினர்மீது இந்த அதிரடித் தாக்குதல் நடாத்தப் (4-ம் பக்கம் பார்க்க)

## கொலையை மூடி மறைக்க அரசு முயல்கிறது

(கொழும்பு) அரசும், பொலிஸாரும் லலித்தின் கொலைக்கு விடுதலைப் புலிகள் மீது பழியை சுமத்தி இந்தக் கொலையை மூடி மறைக்க முயல்வதாக லலித் கட்சியும் ஏனைய எதிர்க்கட்சிகளும் குற்றம்சாட்டியுள்ளன.

ஒரு முக்கிய அரசியல் கட்சியின் தலைவர் தேர்தல் பிரசாரத்தின் போது கொலை செய்யப்பட்டமை இலங்கையின் வரலாற்றிலே இது தான் முதல் தடவை என (4-ம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும்

(கொழும்பு) ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்டது, நடைபெறவிருக்கும் மாகாணசபைத்தேர்தலை ஒத்திப்போடுவதற்கு போதிய காரணமாக மாட்டாது என தேர்தல் ஆணையாளர் திரு. (4-ம் பக்கம் பார்க்க)

## தேர்தலை நேரில் கண்காணிக்க ராஜதந்திரிகள் மறுப்பு

(கொழும்பு) எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை நேரில் கண்காணிக்க வேண்டுமென எதிர்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளுக்கு இலங்கையிலுள்ள வெளிநாட்டு ராஜதந்திரிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

ராஜதந்திரிகள் பலரை சந்தித்த சுதந்திரக்கட்சி உட்பட ஏனைய முக்கிய எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கைக்கே அவர்கள் மறுப்பு தெரிவித்துள்ளதாகவும் ஒருசிலர் உடன்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

1991ல் பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளட்ஸ்ரோன் இவ்வாறானதொரு செயலில் ஈடுபட்டு பின் அவர் விரும்பத்தகாத நபர் என்று முத்திரை குத்தப்பட்டு நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதும் தெரிந்ததே. (வி)

## 7,000 தமிழர் திரும்பி வருகின்றனர்

(சென்னை) தமிழகத்திலிருந்து 7000 இலங்கைத் தமிழ் அகதிகள் மிகவிரைவில் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

நாளை சென்னை வரும் புதுடில்லியில் உள்ள யு. என். எச். சி. ஆர். தலைமை அதிகாரி இலங்கை அகதிகள் பிரச்சினை குறித்து ஆலோசிக்கவுள்ளதாக தமிழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதை தொடர்ந்து மேலும் பல அகதிகள் திருப்பி அனுப்பப்படவுள்ளனராம். (வி)

# வரி விளம்பரம்

## A/L இந்துசமயம்

இந்து சமய 5 வருட வினாவிடைத் தாள்களின் தொகுப்பு விலை 24/-. சகல புத்தகசாலைகளிலும் விற்பனையாகிறது. (இ-4069)

## விற்பனைக்கு

வாடகைக்கு விடக்கூடிய நல்ல நிலையிலுள்ள இரும்புக் கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: Quick Photo, 191, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (இ-42)

## தேவை

சேல்ஸ்மென், வீவா, போர்ட்டர்கள் தேவை. நபர் முழுயுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd, No: 14, Seenier Lane, Jaffna. (A-3024)

ஸ்ருடியோ வேலையில் அனுபவமுள்ள, பழக ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகளும், பெண் காசாளரும் தேவை. நேரில் வரவும். தரன் ஸ்ருடியோ 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-41)

## பயிற்சி

Basic, d Base I + Lotus 1, 2, 3, Word Processing பயில விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Center, 37, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3020)

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், பிறிஜ் தையல் மெஷின்கள், பழைய கதவு, கதவு நிலைகள், பன்னைக்கை மற்றும் பொருட்கள் விற்பனைக்குண்டு. இடம் இல: 112, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (ஏ-3072)

## மீண்டும் இயங்குகிறது

சோதிட விலாசபுத்தகசாலை 46, பெரியகடை, யாழ்ப்பாணம். சோதிட, வைத்திய, விஞ்ஞான புத்தகங்களும் பாடசாலைப்புத்தகங்களும், உபகரணங்களும் விற்பனையாகின்றன. ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சோதிடப்பிரகாச அச்சுயந்திரசாலை, கொக்குவில். (எ-3022)

## வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைவாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமான வர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியகலாநிதி இ. இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (இ-7)

## வைத்திய சேவை

வாதரோகங்களா, சரும ரோகங்களா, தலைமயிர் உதிர்கின்றதா, அல்லது நரைக்கின்றதா, சுழலைக்கட்டிகளா, முகப்பருக்களா நரம்புத்தளர்ச்சியா செய்வினை சூனியம் பிணிதோஷம் போன்றவற்றால் ஏற்பட்ட வியாதிகளுக்கும் மெஞ்ஞான ஆலோசனையுடன் நுண்ணியல் மருத்துவம் வேளாங்கண்ணி வைத்தியசாலை, டாக்டர் எம். கருணாகரன், 616, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (இ-46)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பக் கல்வி ஆசிரியர் பதவிக்கு நேர்முகப் பரீட்சைக்கு உரிய நேரத்தில் கடிதம் கிடைக்காதோர் தமது நியமன தொடர்பாகக் கல்விச்சேவை ஆணைக் குழுவுக்கு மகஜர் அனுப்பத் தீர்மானித்துள்ளனர்.

இம்மகஜர் பற்றிக் கலந்துரையாடுவதற்காக 29-4-93 அன்று காலை 9 மணிக்கு கல்வித் திணைக்களத்தில் கூடவுள்ளதாக இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

# கிளிநொச்சி மாவட்ட சங்கீத, நடன செயல்முறை பரீட்சை

(யாழ்ப்பாணம்)

1992 டிசம்பர் க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்கு பளைப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றி மேற்படி செயல்முறைப் பரீட்சைகளுக்குத் தகுதிபெற்ற பரீட்சார்த்திகளுக்கான செயல்முறைப்பரீட்சை இன்று 26ம் திகதியும் நாளை 27ம் திகதியும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகும்.

தகைமையுள்ள பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை தங்கள் அடையாளத்தை நிரூபித்து அப்பாடசாலையில் கடமையில் ஈடுபட்டிருக்கும் பிரதம பரீட்சகரிடமிருந்து சேகரித்துப் பின்னர் பரீட்சைக்குத் தோற்றும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

# தந்தை செல்வா சிரார்த்த தினம்

(அம்பாறை)

தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் 17-வது சிரார்த்ததினம் இன்று 26-ம் திகதி திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளன. வெரித்தாஸ் வானொலி தமிழ்ப்பணி ஒலிபரப்பில் இன்று மாலை தந்தை செல்வநாயகம் பற்றிய சிறப்பு நிகழ்ச்சி ஒன்றையும் நடாத்தவுள்ளது. (59)

# இன்று

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை மூத்த நயினார் தேவஸ்தான பரிவார மூர்த்திகளின் அஷ்டபந்தன ஹீன பிராயச்சித்த அந்தரித்த பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் இன்று 26ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

0 0 0

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 26-ம் திகதி திங்கட்கிழமை பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. (71)

0 0 0

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோவிலில் வருடாந்த அலங்கார உற்சவத்தையொட்டி இன்று திங்கட்கிழமை பகல் 10 மணிக்கு விசேட அபிடேக ஆராதனைகளும், மாலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் நடைபெற்று சுவாமி திருவீதி உலா வருதலும் இடம்பெறும். (59)

# 16-ம் நாள் சிந்தனை



தோற்றம்: 03 - 11 - 1900

மறைவு: 12 - 04 - 1993

## அமரர் அருணாசலம் சுந்தரம்

(சுந்தரம் ஐயா)

முன்னோடி பிரயாண முகவர் (Pioneer Travel Agent)

சரணவாய் மூத்தநயினார் ஆலய பூசகர் பரம்பரையில் அவதரித்தாய். வடக்கன் மாடுகளை முதன்முதலாக இலங்கைக்கு வரவழைத்தாய். டிமாலாண முன்னோடி முகவராகத் திகழ்ந்தாய். கடவுச் சீட்டுப் பெற்றுக் கொடுத்துப் பலரை வெளிநாடு அனுப்பி வைத்தாய்.

"ஆக வேண்டியதெல்லாம் எழுதவும்" என்று எவர்க்குமே எழுதுவாய்; என்றுமே எழுதுவாய் காசியிலே நீங்கள் கரைத்த கலசங்கள் எத்தனை, சிதம்பரத்தில் நீங்கள் ஏற்றிய தீபங்கள் ஏராளம். மக்கள் கண்கலங்கச் சகிக்க மாட்டாய்.

முடியாது என்று நீங்கள் எதையுமே சொன்னதில்லை. கொழும்பு, இந்தியா, சிங்கப்பூர் நீங்கள் எண்ணியதும் அடைந்தீர்கள். அலுப்பு என்றது உங்கள் அகராதியில் இல்லையையா. ஏசுவாய்; பேசுவாய்; ஏறெடுத்துப் பார்த்திடுவாய்; எவர்க்குமே கோபத்தைச் சாதித்ததில்லையே.

காழ்வினிலே சர்வதேசமொழிகளைச் சரளமாகப் பேசி சாதித்ததோ அதிகம். இறுதியாக நீங்கள் செய்த இறைபணியாக அமைந்தது சிதம்பரவரணி மட விநாயகர் கும்பாபிசேஷமாகும். பிறந்த ஊர் சரணவாய் வாழ்ந்த ஊர்கள் சுழிபுரம், மூளாய், காரைநகர் சங்கானை அத்தனை உறவினரையும் என்றுமே பிணைத்திருந்தாய்.

எம்மைவிட்டுப் பிரிந்த ஐயாவின் ஆத்மாவுக்கு மீண்டும் மாண்பு மிக்க மனிதப்பிறப்பையே அருளுமாறு மன்றுளாடுவானை மன்றுடி வேண்டும்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், கொப்பாட்டப்பிள்ளைகள், உறவினர், நண்பர்கள்.

"மடம்"
சங்கானை. (இ-47)

# மேதின சுலோகங்கள்

★ உழைக்கும் மக்களே! மாற்றத்திற்கான மாற்று வழி ஏதுமில்லை! ஆற்றல் மிகு கரத்தில் எடு ஆயுதத்தை!

★ கொடுங்கோன்மைக்கு சாவுமணி அடிக்க- சாவு ஆயுதத்தை!

★ வேண்டாம்- இங்கு திறந்த பொருளாதாரம்! வேண்டும்- இங்கு சுயசார்புப் பொருளாதாரம்!

★ வீரமுண்டு- துணிச்சலுண்டு- வளமுண்டு- மண்டியிடோம்!

★ இங்கு- வளமுண்டு! எனவே- வாழ்வுண்டு!

★ எங்கள் வாழ்வும்- எங்கள் வளமும்- எமது மண்ணில்!

★ கல்வி- எமது வாழ்விற்கு! எமது வளத்திற்கு!

★ கல்விச் சமூகமே! ஒன்றிணைவோம்! தேசநலனை முன்னெடுப்போம்!

★ புதிய கல்வியை வகுத்திடுவோம்! புதிய பாதையில் நடந்திடுவோம்!

★ தேச நலனை முன்வைத்து தேசியக் கல்வியைப் படைப்போம்!

★ சுவதிசச் செய்திகளை காவியங்கள் ஆக்கிடுவோம்!

★ வடக்கென்றும்... கிழக்கென்றும்... தாயகத்தைப் பிரியவிடோம்!

# ஐ.தே.க. தேர்தல் பிரசார கூட்டம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சியின் முதல் தேர்தல் பிரசாரக்கூட்டம் இன்று 26-ம் திகதி மாலை கண்டியில் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து அவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு பேசுவார்.

ஏனைய கட்சிகளின் தேர்தல் பிரசாரக்கூட்டங்களும் தற்போது நடைபெற்று வருகின்றன. அடுத்த வாரமளவில் இந்தக் கூட்டங்கள் சூடு பிடிக்கும் என தெரிவிக்கப்படுகிறது. (இ)

# செஞ்சிலுவை அதிகாரி குண்டு வீச்சு நடந்த இடத்தை பார்வையிட்டார்

(தாளையடி)

அண்மையில் அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது அம்புலன்ஸ் வண்டியில் அப்பகுதிக்குச்சென்ற வேளை புக்காரா விமான குண்டுவீச்சில் இலங்கைச்செஞ்சிலுவைச்சங்கயாழ் கிளை உபதலைவர் புவனேந்திரன் கொல்லப்பட்ட இடத்தை கொழும்பிலிருந்து இங்கு வந்துள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவின் உயர் அதிகாரி பார்வையிட்டார்.

நடைபெற்ற சம்பவங்கள் பற்றி குண்டுவீச்சு இடம்பெற்ற இடத்தில் வைத்து யாழ்கிளை அதிகாரிகளிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

பின்னர் மாலை இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ். தலைமைச் செயலகத்துக்கு விஜயம் செய்த ச. செ. ச. குழுவின் உயரதிகாரி குண்டு வீச்சில் சேதமடைந்த இலக்க அம்புலன்ஸ் வண்டியையும் பார்வையிட்டார். (163)

# புக்காரா விமானம் ரோந்து கண்காணிப்பு

(எழுதுமட்டுவாள்)

பளை, எழுதுமட்டுவாள், கிளாலிப் பகுதிகளில் நேற்று முன்தினம்காலைபுக்காரா விமானம் ரோந்து கண்காணிப்பில் ஈடுபட்டது. புக்காரா விமானத்தின் இரைச்சலை அடுத்து பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் மாலை கிளாலி கடற்பரப்பில் நின்ற பீரங்கிப் படகிலிருந்து கரைபகுதியைநோக்கிபீரங்கி, ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப் பட்டது. (170-163-ம்)

## விளையாட்டு விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கணேசபுரம் விளையாட்டுக்கழகம் நடத்திய விளையாட்டு விழா நிலையத்தலைவர் திரு. சண்முகநாதன் தலைமையில் இடம் பெற்றது. (83)

## சிரமதானப்பணி

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மேற்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அன்னைபூபதி நினைவுதினத்தை முன்னிட்டு கொழும்புத்துறை சுவாமியார் வீதியினைச் சிரமதானப் பணிமூலம் துப்பரவுசெய்து செப்பனிட்டுள்ளனர். (154)

## பொதுசன நூலக சிறுவர்பகுதி அபிவிருத்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொதுசன நூலக சிறுவர் பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது.

இதற்கான நிதியை வழங்குவதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் தயாராகவிருப்பதாக யாழ்ப்பாண மாநகரசபைக்கு அறிவித்துள்ளது. (159)

## உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

சங்கானையில் தற்காலிகமாக இயங்கிவரும் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் சங்க எல்லைக்குட்பட்ட விவசாயிகளுக்கு டீ. டி. எம். உரவகைகளை சகாய விலையில் விநியோகித்து வருகின்றது. (72)

# "பாலகிருஷ்ணனே லலித்தை சுட்டுக் கொலைசெய்தார்"

(கொழும்பு)

கிருலப்பனை வீதியில் இறந்து கிடந்த அப்பையா பாலகிருஷ்ணன் என்பவரே லலித் அத்துலத்முதலியை சுட்டுக்கொன்றார் என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் கிருலப்பனை அமைப்பாளர் ஏ. ஜே. பிரேமதாஸா அடையாளம் காட்டினார்.

கிருலப்பனையில் அத்துலத்முதலி கலந்து கொண்ட கூட்டத்திற்கு இவரே தலைமை வகித்தவராவார்.

கிருலப்பனையில் பாலகிருஷ்ணனின் சடலம் கிடந்த இடத்திற்கு சமூகமளித்த அவர் லலித் அத்துலத்முதலி கூட்டத்தில் பேசிக்கொண்டிருக்கும் போது அவருக்கு சமீபமாக வந்து சுட்டவர் இவர்தான் என்று அடையாளம் காட்டினார்.

காலஞ்சென்றவரின் முகத்தோற்றம், உடை ஆகியவற்றில் இருந்தே இந்தநபர்தான் தமது தலைவரை சுட்டுக்கொன்றார் எனத் தான் உறுதியாக நம்புவதாக தெரிவித்தார்.

முதலாவதாக தீர்க்கப்பட்ட வேட்டு மேடையில் வைக்கப்பட்டிருந்த ஒலிவாங்கியை தாக்கியதாகவும் இரண்டாவது வேட்டு லலித் அத்துலத்முதலியை தாக்கியதாகவும் அவர் மேலும் கூறினார்.

வீதி வெளிச்சம், மேடை வெளிச்சம் ஆகியவற்றிலிருந்து கொலைசெய்தவரின் முகம் தனக்கு நன்றாகத் தெரிந்தது என்றும் பாலகிருஷ்ணனே இந்தக் கொலையாளி எனத்தான் நிச்சயமாக கூறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

கிருலப்பனை முகலன் மாவத்தையிலுள்ள கூட்டுறவு நிலையத்திற்கு அருகேயுள்ள பாதையின் முடிவில் பாலகிருஷ்ணனின் சடலம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. (ரி)

# சயனைட் உட்கொண்டதாக பொலிஸ் வட்டாரம் தகவல்

(கொழும்பு)

பாலகிருஷ்ணனின் வாயிலிருந்து நுரை தள்ளியதாகவும் அவர் சயனைட் உட்கொண்டதை இது சுட்டிக்காட்டுவதாக அமைந்துள்ளதாக பொலிஸ்வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் தெரிவித்தது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் மரணவிசாரணை நடத்திய சட்ட மருத்துவ அதிகாரி அப்பையா பாலகிருஷ்ணன் என்னும் நபர் சயனைட் வில்லை உட்கொண்டு மரணமடைந்துள்ளார் என்பதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

லலித் அத்துலத்முதலியின் மெய்ப்பாதுகாவலர்கள் தீர்த்த வேட்டுக்களாலேயே இந்த நபர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கு இலக்கானார் என்று பொலிஸ்மாஅதிபர் ஏர்ணஸ்ட் பெரேரா தெரிவித்தார். (ரி)

# லண்டனில் குண்டு வெடிப்பு 34 பேர் காயம்

(லண்டன்)

லண்டனில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் குறைந்தது 34 பேர் காயமடைந்தனர்.

ஒரு ட்ரக்கில் இந்த குண்டு வைக்கப்பட்டிருந்ததாகவும், குண்டு வெடித்ததும் அப்பிரதேசம் முழுவதும் புகைமண்டலமாக காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினரால் இக்குண்டு வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிசார் தெரிவித்தனர். (கே)

# இ. காங்கிரஸிலிருந்து 4 உறுப்பினர் நீக்கம்

(புதுடில்லி)

கட்சி விரோத குற்றச்சாட்டுகள் தொடர்பாக நான்கு உறுப்பினர்கள் இ. காங்கிரஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இ. காங்கிரஸ் ஒழுங்கு நடவடிக்கை கட்டுப்பாட்டுக் கமிட்டி திரு. கே. என். சிங் திரு. எம்.எல். பொத்தேதார், திரு. கே. நட்வர் சிங், திருமதி ஷீலா டிக்ஷிட் ஆகிய நான்கு அதிருப்தியாளர்களையும் கட்சியின் உறுப்பினர் பதவியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு நீக்கியிருக்கிறது.

# இராணுவத்திற்கு எதிராக காஷ்மீரில் பொலிஸார் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(புதுடில்லி)

இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக, மூவாயிரத்துக்கும் அதிகமான பொலிசார் வேலை நிறுத்தத்தையும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களையும் இராணுவத்தினருக்கு எதிராக நடாத்தி வருகின்றனர்.

காஷ்மீர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை எல்லைக் காவல் படையினர் சுட்டுக் கொலை செய்ததை ஆட்சேபித்து மேற்படி வேலை நிறுத்தத்தைச் செய்து வருவதாகவும், இதனால் இராணுவத்துக்கும் பொலிசாருக்கும் இடையில் எந்த நேரத்திலும் பெரும் மோதல்கள் நிகழலாமெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

# அறிவித்தல்

## யாழ். மாவட்டச் சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரினதும் கவனத்திற்கு

எதிர்வரும் மே தினப் பேரணி ஏற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடல் பின்வரும் கால நேர அட்டவணையின்படி நடைபெற இருப்பதனால், யாழ். மாவட்டத்திலுள்ள பின்வரும் மன்றங்களின், சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரும் தத்தம் பகுதியில் நடைபெறும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வேட்டுக் கொள்ளுகின்றேன்.

| கலந்துரையாடல் நடைபெறும் காலமும் நேரமும் | கலந்துரையாடல் இடம்பெறும் இடம். | கலந்துரையாடலில் கலந்து கொள்ள வேண்டியவர்கள். |
|---|---|---|
| 01. 93-04-26 காலை 10 மணி | கணேசா வித்தியாசாலை சித்தன்கேணிச் சந்தி. | வலி மேற்குப் பிரதேச சபையின் ஊழியர்களும் இப்பிரதேச சபை எல்லைக்குள் (சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு) இயங்கும் சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் அனைவரும். |
| 02. 93-04-26 காலை 10 மணி | உடுவில் மான்ஸ் தமிழ் கலவன் பாடசாலை | வலி தெற்கு, வலி வடக்குப் பிரதேச சபைகளின் ஊழியர்களும் இப்பிரதேச சபைகளின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 03. 93-04-26 பிற்பகல் 02 மணி | அத்தியார் இந்துக் கல்லூரி நீர்வேலி. | வலி கிழக்கு பிரதேச சபையின் ஊழியர்களும் வலி கிழக்குப் (கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவு) பிரதேச சபையின் எல்லைக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 04. 93-04-26 பிற்பகல் 02 மணி. | நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். | பருத்தித்துறைப் பிரதேச சபை, பருத்தித்துறை நகரசபை வல்வெட்டித்துறை நகர சபை, வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை ஆகியவற்றின் ஊழியர்களும் இந்தச் சபைகளின் எல்லைகளுக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகளும். |
| 05. 93-04-26 பிற்பகல் 02 மணி | சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி. | சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரிப் பிரதேச சபை ஆகியவற்றின் ஊழியர்கள், இம்மன்றங்களின் எல்லைகளுக்குள் இயங்குகின்ற சகல சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் ஆகியோர் அனைவரும். |

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
93-04-23.

(எ 3081)

# மே தின ஊர்திகள்: பரிசுகள் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மே தின ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் பத்து ஊர்திகளுக்கு தரம் வாய்ந்த பரிசுகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்கள், கூட்டுறவுத்துறை, தனியார் நிறுவனங்கள், வெகுஜன அமைப்புகள் மிக எழுச்சியுடன் சமகால நிகழ்வுகளை வெளிப்படுத்தும் வகையில் இவ்வருட மே நாளை முன்னெடுக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது சம்பந்தமாக ஊர்வலத்தில் பங்குகொள்ளும் ஊர்திகளினது அமைப்பு பின்வரும் சித்தரிப்புக்களைக் கொண்டதாக விளங்கவேண்டுமென மே நாள் ஏற்பாட்டுக் குழு அறிவுறுத்தியுள்ளது.

தமிழீழ போராட்ட வரலாற்றில் முக்கிய கட்டங்கள். பேரினவாதக் கொடூரத்தின் மத்தியிலும் உழைக்கும் மக்களது ஆற்றலினால் பொருளாதாரத் தடை தோல்வியுறுதல். உழைப்பின் பயனை அரசியல். சமூக பொருண்மிய மேம்பாட்டுக்கான அடிக்கட்டுமானப் பணிகளைச் செலுத்தபடுத்தல். ஸ்ரீலங்கா அரசின் இனவெறியால் ஏற்படும் அவலங்கள், கிளாலிப் படுகொலைகள். கடற்சூழி லாளர் படும் இன்னல்கள் இன்னல்களுக்கு மத்தியிலும் கல்வியில் சாதனைகள். தென் தமிழீழத்தில் இராணுவ அட்டூழியங்கள். பெண் விடுதலை.

ஊர்திகளை அமைத்தவர்களின் பெயர், மற்றும் விபரங்கள், ஊர்திகளின் முன்னும் பின்னும் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். சாரதி, உதவியாளர் மற்றும் ஊர்திச் சித்தரிப்பு பாத்திரங்களைத் தவிர ஏனையோர் ஊர்தியில் செல்வது தவிர்க்கப்படல் வேண்டும்.

ஊர்தியின் அளவு:- 24 அடி நீளம் - 11 அடி அகலம் - 12 அடி உயரம் கொண்டதாக ஊர்திகள் அமையவேண்டும். ஊர்வலத்தின்போது ஊர்திகளைப் பார்வையிட்டுத் தரம் வாய்ந்தவைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன. (வி)

# காலமானார்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவையாளரும் யாழ்ப்பாண நகர பத்திரிகை விற்பனையாளருமான ஆ. கி. நடராசா 68 வயது நேற்று முன்தினம் காலமானார்.

# இராசி பலன்

26-04-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு சித்திரை 13)

சதுர்த்தி காலை 7-32 வரை. மிருகசீரிடம் மு. இ. 7-08 வரை. அமிர்தசித்தயோகம் இராகு காலை 7-29 முதல் 8-59 வரை. சுபநேரம் காலை 11-59 முதல் 1-29 வரை.

மேடம்; வாழ்க்கை சந்தோஷம், தயாளகுணம், துணிச்சல்.

இடபம்; தாயாருக்கு நலக்குறைவு, மன உளைச்சல், அலைச்சல்,

மிதுனம்; செயலில் தீவிரம், தொழில் சிறப்பு இனிய சம்பாஷணை.

கடகம்; செல்வாக்கு குறைவு, கடன்சுமை, மனப் பயம்.

சிங்கம்; வாழ்க்கை சுகம், அயலூர் பயணம், கடமை உணர்வு.

கன்னி; தொழில் ஆதாயம், உயர்ந்த ஸ்தானம், பண வரவு.

துலாம்; தீய எண்ணம், முரண்பாடு. குடும்பத் தொல்லை.

விருச்சிகம்; தொழில் பதட்டம், சொத்துத் தகராறு, சோதனை.

தனுசு; குடும்ப ஒற்றுமை, மனநிம்மதி. தெய்வீக செலவு.

மகரம்; குடும்ப சுகம், கருத்து ஒற்றுமை, உல்லாசம்.

கும்பம்; கூனிக் குறுகல், மனசங்கடம், தொல்லை.

மீனம்; இடர்பாடு, மாமனார் தொல்லை, வாக்குப்பகை.

— ஜோதிடர்

# தேர்தல் வன்முறை அதிகரிப்பு

## பலருக்கு கொலைப் பயமுறுத்தல்

### பொலிஸார் தகவல்

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் பல எதிர்க்கட்சி வேட்பாளர்களுக்கு கொலைப்பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை இவ்வாறு 20 முறைப்பாடுகள் வந்துள்ளதாகவும் பெருமளவு மிரட்டலும், கொலைப்பயமுறுத்தலும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் கட்சி) யினருக்கு விடுக்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் சிலரது வீடுகள் மீது பலத்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (வி)

# வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு

## நஷ்டஈடு வழங்க கூடாது

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு நஷ்டஈட்டுப் பணம் வழங்கக்கூடாது என்று ரேபியா நிறுவனத்திற்கு பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

இராணுவக் கட்டுப்பாடு களில்லாத பகுதிகளிலிருந்து கிடைக்கும் விண்ணப்பங்களுக்கு நஷ்டஈட்டை வழங்கினால் மீண்டும் நஷ்டஈடு வழங்கப் படக்கூடிய சூழ்நிலை உருவாகலாம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன

# தமிழக அரசு

## புலிகளுக்கு உதவவில்லை

(சென்னை)

தமிழக கடற்கரைப் பகுதிகளில் கடலோர காவல் கண்காணிப்பு குறையவில்லை யென்றும் விடுதலைப்புலிகளுக்கு டீசல், மண்ணெண்ணெய் கடத்துவதற்கு தமிழக அரசு எந்த விதத்திலும் துணைபோகவில்லை என்றும் மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் குற்றம் சாட்டியுள்ளதை திரு. சோமசுந்தரம் மறுத்துள்ளார். (இ-கி)

# 60,000 பொலிஸார்

## மே தினத்தில் கடமை

(கொழும்பு)

எதிர்வரும் மே தினத்தில் அசம்பாவிதங்கள் நிகழாமல் இருப்பதற்கு 60,000 பொலிஸ்காரர்கள் சேவையில் அமர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸ் 20 குழுக்களும், இந்தத் தினத்தில் கடமையில் ஈடுபடுவதோடு, வெளி மாவட்டங்களில் இருந்தும் 3000 பொலிசார் வரவழைக்கப்பட இருக்கிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

25-ம் திகதி தொடக்கம் பொலிசாரின் லீவுகள் அரசாங்கத்தினால் ரத்துச் செய்யப்பட்டுள்ளது. (சு-கி)

பலாலி முகாமிலிருந்து

# கடும் ஷெல் தாக்கு

# இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து நேற்று அதிகாலை 5-30 மணி முதல் வலி வடக்கு, வலி மேற்கு பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட கடும் ஷெல் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்தனர்.

காலை 10-50 மணியளவில் அளவெட்டி கும்பிளாவளை பிள்ளையார் கோவிலடி, காளி கோவிலடி பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் அளவெட்டி முல்லியார் வீதியைச் சேர்ந்த செல்வி கண்மணி விஜயநாகம் (32 வயது) அருமைத்துரை ராஜசேகர் (25 வயது) ஆகியோர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நண்பகல் வரை கடும்ஷெல் தாக்குதல் இடம்பெற்றது. (56-கி)

### லலித் கொலையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லலித்தின் கொலைக்கு அரசே முழுப்பொறுப்பு என அனைத்து மக்களும் நம்புகிறார்கள். இந்நிலையில் நாளை மறுதினம் புதன்கிழமை சனத்தை மயானத்தில் லலித்தின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் தலைநகரில் வந்து கூடியவண்ணமுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்நிலையில் இறுதிஊர்வலத்தின்போது லலித்தின் ஆதரவாளர்கள் அரச கட்டிடங்களையும் அரசியல்வாதிகளின் இல்லங்களையும் தாக்கலாம் எனக் கருதி பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக வொய்ஸ் தெரிவித்தது.

எந்தக் கலவரத்தையும் சமாளிக்கும் விதத்தில் முப்படைகளும் வைக்கப்பட்டிருப்பதுடன் இராணுவம் தலைநகரின் முக்கிய பகுதிகளில் தீவிர ரோந்தில் ஈடுபட்டிருப்பதாக "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" தெரிவித்தது.

இதேவேளை தலைநகர் எங்கும் சோகத்தை பிரதிபலிக்கும்வகையில் கட்டிடங்கள் வாகனங்கள், வீதிகள் எங்கும் வெள்ளைக்கொடி பறக்கவிடப்பட்டுள்ளதாம். (கி-சு)

### லலித் கொலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் 'லண்டன் கிளை' வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை மேலும் கூறுகையில்: திரு. லலித் அத்துலத் முதலி அவரது அரசியல் எதிரிகளாலேயே படுகொலைசெய்யப்பட்டிருக்கிறார் என்பது மக்களுக்கு தெளிவாகப் புரியும். இப்படுகொலைக்கு அரசே காரணம் என்றும் கூறிய விடுதலைப்புலிகள், இக்கொலைக்கு புலிகள்தான் காரணம் என்று கூறும் அரசாங்கத்தின் செய்தியை முற்றாக நிராகரித்துள்ளார்கள். (சு-ஜ-கி)

### அதிபர்கள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அதிபர்களுக்கான கலந்துரையாடல் 1. அப்பியாசக் கொப்பி விநியோகம், 2. பாடசாலைகளின் அசையும், அசையாச் சொத்துவிபரம். 3. பாடசாலை மாணவர் உணவுமுத்திரை விநியோகம் 4. மே தினம் சம்பந்தமாகவும் கலந்துரையாடவிருப்பதால் சகல கொத்தணி அதிபர்களும், பாடசாலை அதிபர்களும் வருகை தரும் வண்ணம் பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

பண்டத்தரிப்புக் கோட்டம் இன்று பி. ப. 3-00 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும், தென்மராட்சி கோட்டம் நாளை காலை 9-30 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும், வடமராட்சிக்கோட்டம் நாளை பி. ப. 2-00 மணிக்கு யா/வேலாயுதம் ம. வி. யிலும் நடைபெறும். (கி)

### கொலையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இக்கொலைக்கு அரசுதான் பொறுப்பு என ஏற்கனவே எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளதும் தெரிந்ததே. (சி)

### ரூபவாஹினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டுள்ளார்.

ஆத்திரமடைந்திருந்த லலித்தின் ஆதரவாளர்களே இவரைப் பலமாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லலித் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அங்கு சென்ற அமைச்சர் திரு. விமல் விக்கிரமசிங்க தாக்கப்பட்டதும் தெரிந்ததே. (சு-கி)

### புலிகளுக்கு தொடர்பில்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டவரென்பதையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதென்று முன்னாள் அமைச்சர் திரு காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதேநேரம் லலித் அத்துலத் முதலி சுடப்பட்டபோது மிக அண்மையிலிருந்த நந்தர குமாரசிறி என்பவர் சம்பவத்தை எடுத்துக்கூறுகையில்; கறுப்புசேர்ட், சாரம் அணிந்த ஒரு கருமை நிற இளைஞர் மேடைக்கு அண்மையில் வந்து அத்துலத்முதலியை சுட்டார். மூன்று துப்பாக்கிச்சூடு அவர் மீது பிரயோகிக்கப்பட்டது. பின்பு அந்த இளைஞர் தப்பி ஓடி காரில் ஏறினர். ஆனால் அவர் மீது அத்துலத்முதலியின் மெய்ப்பாதுகாவலர் துப்பாக்கியால் சுட்டதை தான் நேரில் கண்டதாகத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த எச். பி. திஸநாயக்க கூறுகையில், அத்துலத் முதலி சுடப்பட்ட பின்பு அந்த இடத்துக்கு எந்தவொரு பொலிஸ்காரரும் வரவில்லை என்றார்.

### தினேஷ் கவலை

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தினேஷ் குணவர்த்தன அத்துலத் முதலியின் கொலைக்கு கவலை தெரிவித்துள்ளார். இதேவேளை திருமதி ஸ்ரீ மானி அத்துலத்முதலி மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார். (சு-கி)

# வடமராட்சி கடலில்

# பாரிய கப்பல்

(தாளையடி)

கட்டைக்காடு—வெற்றிலைக்கேணி இராணுவ முகாமை அண்டிய கடற்பகுதியில் கரைக்கு சமீபமாக பாரிய கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று முன்தினம் மாலை தொடக்கம் நிலைகொண்டுள்ளது.

கப்பலில் இருந்து கரைக்கும் தரையில் இருந்து கப்பலுக்கும் சிறிய பீரங்கிப்படகுகள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்ததைக் காணக் கூடியதாயிருந்தது. இதே வேளை கப்பலுக்கு அண்மையில் சிறிய பீரங்கிப் படகுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இரவும் பகலும் ஹெலிகொப்டர்கள் அடிக்கடி வெற்றிலைக்கேணி, ஆனையிறவு முகாம்களுக்கு வந்துபோய்க் கொண்டுமிருந்தன. (163-கி)

# காமினிக்கு பாதுகாப்பு

## அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் காமினி திஸநாயக்காவின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவரது கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. லலித்தின் கொலையை அடுத்தே திரு. காமினியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை கட்சியின் பொதுச்செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திராவின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. லலித் அத்துலத் முதலி கொலை செய்யப்பட்டமை கட்சியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாம். (சி)

### லலித் கொலைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வதாக ஜனாதிபதி பிரேமதாசா பெரிதும் கவலை தெரிவித்துள்ளார்.

நேற்றுநடைபெற்ற ஐ.தே. கட்சி கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு அங்கலாய்த்துக் கொண்டாராம்.

மனிதர்களை படுகொலை செய்வதில் தமது கட்சி நம்பிக்கைவைப்பதில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளாராம். (க-சி)

### திட்டமிட்டபடி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொலையைக் காரணம் காட்டி ஐ. தே. க. அரசு மாகாணசபைத் தேர்தலை ஒத்திப்போடக்கூடும் என எதிர்க்கட்சிகள் கருத்து வெளியிட்டமையை சுட்டிக் காட்டியே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறும் எனவும் கட்சித் தலைவர்களுக்கும் தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கும் பொலிசார் கூடிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-கி)

### கொலையாளி பற்றிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்தார் என்று கூறுவதிலும் சந்தேகம் இருக்கின்றது. அதோடு அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட அடையாள அட்டை கூட இன்னொருவரின் அடையாள அட்டையாக இருக்கலாம்.

அரசாங்கம் இந்தக் கொலையைப் புரிந்துவிட்டு மற்றவர்கள் மேல் பழிபோட எத்தனிக்கின்றது என்று லக்தில ஆகிரிவி குறிப்பிட்டார்.

இதேவேளை புலிகளைச் சேர்ந்த அப்பையா பாலகிருஷ்ணன் என்பவரே லலித்தை கொலை செய்ததாக அரசு வானொலி, அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள், ரூபவாஹினி தொடர்ந்தும் தலைப்புச்செய்திகளை வெளியிட்டு வருகின்றன. (சு-கி)

# அரச ஊழியர்

## லீவு ரத்து

(கொழும்பு)

அரசாங்க, மாகாணசபைகள் மற்றும் மத்திய வங்கி ஊழியர்களின் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் மேமாதம் 9-ம் திகதி முதல் 18-ம் திகதி வரை இவர்களது லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 17-ம் திகதி நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலை ஒட்டி இவர்கள் லீவுகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (இ)

### மட்டுநகரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது. இதில் ஐந்து படையினர் கொல்லப்பட்டனர். இவர்களிடமிருந்து ரி. 56 ரக துப்பாக்கிகள் நான்கு. இலகுரக ரவைக்கூடுகள் 16, நடுத்தரரவைகள் 324 ஜே. ஆர். கைக்குண்டு ஒன்று, தொலைத் தொடர்பு சாதனம் ஒன்று. ஏ. கே. ரவைக் கூடு தாங்கிகள் நான்கு, தலைக் கவசங்கள் இரண்டு ஆகிய ஆயுதங்களை புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை. (சு-கி)

### யாழ். ஆஸ்பத்திரியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆறுபேர் மேலதிகமாக வெளிநோயாளர் பிரிவில் கடமையாற்றுவர். ஏனையோர் விடுதிகளில் கடமையாற்றுவர்.

இதேவேளை கடந்த வாரம் யாழ்ப்பாணம் வைத்தியசாலையிலிருந்து கொழும்பு சென்ற யாழ்ப்பாண வைத்தியசாலை நிர்வாகக்குழுவினர் கொழும்பில் சுகாதார அமைச்சு உயரதிகாரிகளுடன் வைத்தியசாலை சம்பந்தமான பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடியுள்ளனர். (56-கி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் ... மேற்கு வீதி, 58-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under licence Number B/10838/B